ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2121/1 - 2019 අප්‍රේල් මස 29 වැනි සඳුදා - 2019.04.29

*2121/1 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.சீ.எவ். 1/64*

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
*2019, ஏப்பிறல் 29.*

ஒழுங்குவிதிகள்

*2019, ஏப்பிறல் 22 ஆந் திகதிய 2120/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 1* ஆம் இலக்க, அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள், இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

(1) 2 ஆம் ஒழுங்குவிதியில் -

(அ) "சட்டத்துறைத் தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "சிரேட்ட அரச சட்டவுரைஞரை, அரச சட்டவுரைஞரை அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சிரேட்ட அரச சட்டவுரைஞரை, அரச சட்டவுரைஞரை அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

1A - G 29756 — 382 (2019/04)

**கவனிக்க.**-2120/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைத் தொடரின் இறுதி இல. 2120/30 ஆகும்.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) ''பயங்கரவாதம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் -

(i) (ஒ) என்னும் பந்தியை (ஓ) என்னும் பந்தியாக மீள எழுத்திடுவதன் மூலமும்; அத்துடன்

(ii) (ஓ) என்னும் பந்திக்கு நேர் முன்னர் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(ஒ) பொது மக்களின் அல்லது அவர்களுள் ஒரு பிரிவினரின் உடனலத்துக்கும் காப்புக்கும் பாரதூரமான ஆபத்தை விளைவித்தல்; அல்லது''.

(2) 15 ஆம் ஒழுங்குவிதியின் (13) ஆம் பந்தியில் -

(அ) உட்பந்தி (ஆ) வில்,''ஒலிக்கும்படிசெய்தலையும் உள்ளடக்கும்;''என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஒலிக்கும்படி செய்தலையும் ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணத்தினூடாக ஏதேனும் விடயத்தை அல்லது வேறு உள்ளீட்டைக் கடத்தலையும் உள்ளடக்கும்;''; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(உ) ''தொலைத்தொடர்பு உபகரணம்'' என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத் தொடர்புச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.''.

fdf

(3) 27 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் -

(அ) அவ்வொழுங்கு விதியின் (அ) என்னும் பந்திக்கு நேர்முன்னர் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(அ) உறுப்பினரொருவராக அல்லது பணியினரொருவராகவிருத்தல் ஆகாது;

(ஆ) தலைமைத்துவம் வழங்குபவராகவிருத்தல் ஆகாது;'';

(ஆ) அப்பந்தியின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் உட்பந்திகளை முறையே அப்பந்தியின் (இ), (ஈ), (உ), (ஊ), (எ) மற்றும் (ஏ) என்னும் உட்பந்திகளாக மீள எழுத்திடுவதன் மூலமும்.

(4) 32 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்து முறையே 32அ என்னும் ஒழுங்குவிதியாகவும் 32ஆ என்னும் ஒழுங்குவிதியாகவும் பயனுற வேண்டிய பின்வரும் புதிய ஒழுங்குவிதிகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

''முழு முகத்தையும் மறைக்கின்ற ஏதேனும் தைத்த ஆடையை, துணியை அல்லது வேறு பொருளை அணிவதனைத் தடை செய்தல்.

32அ. (1) (அ) ஆளொருவரின் ஆளடையாளத்தைக் காண்பதற்கு ஏதேனும் தடங்கலை விளைவிக்கும் ஏதேனும் முறையில் முழுமுகத்தையும் மறைக்கின்ற ஏதேனும் தைத்த ஆடையை, துணியை அல்லது அத்தகைய வேறு பொருளை ஆளெவரும் ஏதேனும் பொது இடத்தில் அணிதலாகாது.

(ஆ) இப்பந்தியின் நோக்கத்துக்காக -

''பொது இடம்'' என்பது, ஏதேனும் பொது வீதி, ஏதேனும் கட்டிடம், ஏதேனும் அடைக்கப்பட்ட அல்லது திறந்த இடம், ஏதேனும் வாகனம் அல்லது வேறேதேனும் போக்குவரத்து முறை என்பனவற்றை உள்ளடக்கும்;

''முழுமுகம்'' என்பது, காதுகளுட்பட ஆளொருவரின் முழு முகமும் என்று பொருளாகும்;

''பொது வீதி'' என்பது, ஒரு பொதுப் பாலத்தின் மேலுள்ள ஏதேனும் வீதி வழி, ஏதேனும் நடை பாதை, வடிகால், அணைக்கட்டு அல்லது ஒரு பொது வீதிக்குரிய அல்லது அதனோடு தொடர்புபட்ட குழி என்பனவற்றை உள்ளடக்கும்.

(2) ஓராம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்டவாறான தடையானது, அத்தகைய தைத்த ஆடை, துணி அல்லது அத்தகைய வேறு பொருள் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன் கீழ் விதித்துரைக்கப்பட்டிருப்பின் மற்றும் அதிகாரமளிக்கப்பட்டிருப்பின், ஏற்புடையதாதலாகாது.

(3) ஓராம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுதல் இந்த ஒழுங்குவிதிகளின் மீறுகையொன்றாக இருத்தல் வேண்டும்.

மத, மட்டுமீறிய தீவிரவாத அல்லது தீவிரவாதக் கோட்பாடுகளில் ஈடுபடுவதற்கான தடை.

32ஆ. (1) பயங்கரவாதத்தை அல்லது குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாட்டைப் பெருமைப்படுத்துகின்ற, ஊக்குவிக்கின்ற, மேம்படுத்துகின்ற அல்லது அதற்கு ஆதரவு கொடுக்கின்ற மத அல்லது ஏதேனும் மட்டு மீறிய தீவிரவாத அல்லது தீவிரவாதக் கோட்பாடுகளைப் போதனைசெய்வதில் ஆளெவரும் ஈடுபடுதலாகாது.

(2) ஆளெவரும், பயங்கரவாதத்தை அல்லது குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாட்டைப் பெருமைப்படுத்துகின்ற, ஊக்குவிக்கின்ற, மேம்படுத்துகின்ற அல்லது அதற்கு ஆதரவளிக்கின்ற அல்லது மத அல்லது ஏதேனும் மட்டு மீறிய தீவிரவாத அல்லது தீவிரவாதக் கோட்பாடுகளைப் போதிப்பதில், கற்பிப்பதில் அல்லது விரிவுரையாற்றுவதில் பயங்கரவாதத்தை அல்லது குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாட்டைப் பெருமைப்படுத்துகின்ற, ஊக்குவிக்கின்ற, மேம்படுத்துகின்ற அல்லது அதற்கு ஆதரவளிக்கின்ற அத்தகைய மத, மட்டுமீறிய தீவிரவாத அல்லது தீவிரவாதக் கோட்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் கல்விசார் செயற்பாட்டில் போதனாசிரியராக, ஆசிரியராக, விரிவுரையாளராக அல்லது வேறெந்த முறையிலும் சம்பந்தப்பட்டுள்ள எவரேனும் பிரசையல்லாதவரின் சேவைகளைத் தொழிலுக்கமர்த்துதலோ அல்லது ஈடுபடுத்துதலோ ஆகாது.

(3) ஓராம், (2) ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுதல் இவ்வொழுங்குவிதிகளின் மீறுகையொன்றாகவிருத்தல் வேண்டும்.

(5) 50 ஆம் ஒழுங்குவிதியில், (2) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(3) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஏதேனும் தவறு பற்றிய ஏதேனும் தகவலைப் பெற்றுள்ள எவரேனும் கிராம அலுவலர் அத்தகைய தகவலை மிக்க அண்மையிலுள்ள பொலிசு நிலையத்துக்கு உடனடியாகக் கொடுத்தல் வேண்டும்.".

(6) 75 ஆம் ஒழுங்குவிதியின் (3) ஆம் பந்தியில், அதன் (உ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(உ) ஒழுங்கமைப்பின் நோக்கங்களுக்காக மேலே குறித்துரைக்கப்பட்டவாறு, பணவகையான அல்லது வேறுவகையான ஆதரவைப் பரிந்து கேட்டல், சேகரித்தல் அல்லது முனைதல் ஆகாது; அல்லது"

(7) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையில், (ஓ) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஔ) 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுக அதிகார சபையினால் அல்லது அது சம்பந்தமாகச் செய்வதற்கு அவசியமான அல்லது தேவைப்படுத்தப்பட்டவாறான எவ்விவரணத்தினையுமான எல்லாச் சேவைகளும், வேலையும் அல்லது தொழிலும்.".

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.